**நெடுந்தீவு பிரதேசசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மே 12 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நெடுந்தீவு பிரதேசசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்பற்றப்பட்டிருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) உள்ளூராட்சி சேவை அலுவலர்களுடைய ஓய்வூதியங்களும் இளைப்பாற்று நயங்களுக்குமான ஓய்வூதியப் பணிப்பாளருக்கு முன்னைய ஆண்டு செலுத்த வேண்டியுள்ள ரூபா 694,814 இற்கு ஓய்வூதிய ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் திரண்டநிதி கணக்குகளில் கூட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) ரூபா 3,835,000 பெறுமதியான 4 வகையான சொத்துக்கள் கட்டடத்தின் பெறுமதிக்குள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்காமையினால், நிதிக்கூற்றுக்களில் கட்டடங்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(இ) 2011 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரைக்குமான முத்திரைக் கட்டணம் ரூபா 430,850 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை.

#### 1.3.3 கணக்கு பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

சபையினால் காணி கட்டிட பதிவேடு, நிலையான சொத்துக்கள் பதிவேடு, இழப்புக்களும் நட்டங்களும் பதிவேடு, அளவைப் பதிவேடு ஆகிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 பெறவேண்டிய கணக்குகள்**

1999 ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய 02 முற்பணங்கள் ரூபா 156,215 இன்றுவரை சபையினால் தீர்ப்பனவு செய்யப் பட்டிருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பொருள் பெறுகைப் பத்திரம் இல்லாமையின் காரணமாக ரூபா 85,055 பெறுமதியான 03 கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிருவாக விதிகள் அத்தியாயம் III பிரிவு 32 | சபையினால் ஆதனவரி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்படாததுடன் ஆதனவரி அறவீடு சபையினால் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் | |
| (i) நிதிப்பிரமாணம் 315 | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அரசாங்க சொத்துக்கள் பாதுகாப்பான கட்டுக்காப்பில் வைக்கப்பட்டு பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 316(2) | நாளாந்த காசு மீதிகள் காவற்கட்டுகாப்பில் வைக்கப்படும் பொருட்களுக்கான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 571 | காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 1,373,254 தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 880 | காசு, களஞ்சியம் என்பனவற்றுக்குப் பொறுப்பாக உள்ள அலுவலரிடம் பிணைப்பணம் பெற்றுக் கொண்டமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (v) நிதிப்பிரமாணம் 1645 | நாளாந்த வாகன ஓட்டக்கூற்று மாதாந்தம் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 10 ஒக்டோபர் 1990 ஆம் திகதிய இலக்கம் 41/90 பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருபம் | சபையின் வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

1.3.7 **போதியளவில் அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

புறாக்கூடு ஒன்றினை அழகுபடுத்துவதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் ரூபா 1,292,854 இற்கு 2015 ஆம் ஆண்டில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் இன்றுவரை முடிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டில் சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 2,252,348 இருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 751,422 ஆகவும் இருந்தது. இது மீளாய்வாண்டுக்கான நிதிப்பெறுபேறுகள் ரூபா 1,500,926 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 2,119,384 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறிய மிகையாக ரூபா 357,582 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 1,761,802 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 6,129,907 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 3,372,923 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படுமூலதனம் ரூபா 2,756,984 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.4 வருமான நிர்வாகம்

#### 2.4.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2016 | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | **ரூபா** 000 | **ரூபா** 000 | **ரூபா** 000 |
| இறைகளும் வரிகளும் | 103 | 96 | 7 |
| குத்தகை வாடகைகள் | 1,028 | 855 | 78 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 22 | 77 | - |
| ஏனைய வருமானங்கள் | 17,442 | 12,418 | 2,683 |
| **மொத்தம்** | **18,595** | **13,446** | **2,768** |

**2.4.2 ஆதனவரி**

சபையில் உள்ள ஆதனங்களுக்கு ஆதனவரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.3 குத்தகை மற்றும் வாடகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குத்தகை ரூபா 43,700 சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.
(ஆ) தெரு உருளை வாடகை ரூபா 775,000 நிலுவையாக காணப்படுகின்றது.

**2.4.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

சபையின் எல்லைக்குள் உள்ள 01 தொலைத் தொடர்பு கோபுரத்திற்கான வருடாந்த வரி அறவீடு செய்திருக்கவில்லை.

**2.4.5 ஏனைய வருமானம்**

சபையின் எல்லையிலுள்ள 06 மயானங்களிற்கு சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.6 முத்திரைக் கட்டணம்**

2006 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 2,089,440 முத்திரைக் கட்டணம் அறவிடப்படாதுள்ளது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

சபையில் 32 பதவியினருக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தபோதும் 21 பதவியினரே கடமையாற்றுகின்றனர். அதன் பிரகாரம் 12 பதவியினர் பற்றாக்குறையாகவும் 01 பதவியினர் மிகையாகவும் காணப்படுகின்றது.

**3.2 குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

சபையில் நீர் பௌசர் பயன்பாடின்றிக் காணப்படுகின்றது.

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

**செலவினக் கட்டமைப்பு**

பாதீட்டுச் செலவினங்களுக்கும் உண்மைச் செலவினங்களுக்கும் இடையே ரூபா 3,200 தொடக்கம் ரூபா 5,921,202 வரையான செலவின வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது